بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 16.09.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

உலகில் வருகிற ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் விடை பெற்றுச் செல்ல வேண்டியதுள்ளது. இன்னும் சொல்வதாயின், எந்தவொரு பொருளுக்கும் நிரந்தரத் தன்மையில்லை. சிலர் மிக மிக சிறிய வயதில் அல்லாஹ்விடம் போய் விடுகின்றனர். அல்லாஹ் அவர்களை தன் பக்கம் அழைத்துக் கொள்கிறான். சிலர் இளம் வயதிலும், சிலர் நீண்ட வயதிற்குப் பிறகும், சிலர் தமது வாழ்நாளில் அதிகபட்ச எல்லையையும் சென்றடைகிறார்கள். ஆனால், சில இருப்புகள் எத்தகையவை எனில் அவர்கள் வஃபாத் ஆகும்போது ஆதங்கப்படுபவர்களின் வட்டம் மிகவும் பரந்ததாகி விடுகிறது. அத்தகைய மிகவும் விருப்பத்திற்குரிய மனிதன் இளம் வயதில் திடீரென்று இவ்வுலகை விட்டு விடை பெற்றுச் சென்று விட்டால் துக்கமும், ஆதங்கமும் மிக அதிகமாகி விடுகிறது. ஆனால், அல்லாஹ் நமக்கு ஒவ்வொரு கஷ்டத்திலும் துக்கத்திலும் ஆதங்கத்திலும் அதிர்ச்சியின் நிலையில் அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி அடைந்தவாறு இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்ற துஆவை செய்யுமாறு கற்றுத் தந்துள்ளான். நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம். இந்த உலகிலிருந்து பிரிந்து செல்லும்போது அளவற்ற பொறுமையை மேற்கொண்டு இந்த துஆவை ஓதும்போது மர்ஹூமின் தகுதியை அல்லாஹ் உயர்த்துகிறான். அதே வேளையில் அவரது பின்னால் இருப்பவர்களின் மன நிம்மதிக்கும் ஏற்பாடு செய்கிறான்.

கடந்த நாட்களில் நமது ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மிகவும் அன்பிற்குரிய மாணவர் ரிஸா சலீம் ஒரு விபத்தில் தமது 20 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஒருவர் நம்மிடம் கூறினார்: மர்ஹூம் வஃபாத் ஆன இரண்டு மணி நேரத்திற்குள் மர்ஹூமின் வீட்டிற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக நான் எனது மனைவியுடன் சென்றேன். மர்ஹூமின் தாயார், 'அவர் எனது மிக அன்பிற்குரிய மகனாக இருந்தார். ஆனால், அவரை அழைத்தவன் அதனை விட அன்பிற்குரியவன்' என்று கூறினார். இதனை கேட்டு எனது மனைவியின் வியப்பிற்கு எல்லையே இல்லாமல் ஆகி விட்டது. இதுவே நம்பிக்கை கொண்டவரின் மகிமைக்கு ஏற்ற பதிலாகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் காணப்படுகிறது. எந்த புலம்பலும் இல்லை. ஆயினும், துயரம் ஏற்படுகிறதுதான். அதில் மனிதன் அழவும் செய்கிறான். துக்கம் அதன் எல்லையை தொடவும் செய்கிறது. தாயை விட அதிகமாக ஒரு வாலிப மகனின் மரணத்தில் வேறு யாருக்கு அதிக துயரம் இருக்க முடியும்? மரணத்தின் உணர்வு இருக்க முடியும்? அல்லது ஒரு தந்தையை விட வேறு யாருக்கு ஒரு வாலிப மகனின் பிரிவு உணர்வு இருக்க முடியும்? அவர்களைப் பற்றி தான் இங்கு கூறப்பட்டது. விபத்து பற்றி கேள்விப்பட்டதுமே மிகவும் அதிர்ச்சியுற்றிருந்தார்கள். அழவும் செய்தார்கள். துஆவும் செய்திருப்பார்கள். ஆனால், சூழ்நிலை தெளிவாகி மரணத்தின் செய்தி கிடைத்த சிறிது நேரம் கழிந்த நிலையில், மரணம் நிகழ்ந்து விட்டது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறியவாறு முழுமையான அமைதியை அடைந்து விட்டார்கள். எனவே, இதுவே உண்மையான நம்பிக்கை கொண்டவரின் மகிமையாகும்.

வாலிப மகனின் திடீர் மரணத்தை இவ்வளவு எளிதில் மறந்து விட முடியாது. ஆனால், ஒரு முஃமின் தனது வேதனையை அல்லாஹ்வின் முன் நின்று எடுத்து வைக்கிறார்; அழவும் செய்கிறார். மன நிம்மதிக்காகவும், மர்ஹூமின் தகுதியை உயர்த்துவதற்காகவும் துஆவும் செய்கிறார். நான் ஜெர்மனி பயணத்தில் இருந்தேன். திரும்பி வருவதற்கான பயணம் தொடங்கி இருந்தது. பயணம் புறப்படும் முன்பே விபத்து நடந்தது குறித்து செய்தி கிடைத்து விட்டது. வழியிலேயே வஃபாத் செய்தியும் கிடைத்தது. அன்பிற்குரிய அந்த இளைஞரின் முகம் மீண்டும் மீண்டும் என் முன் வந்து கொண்டிருந்தது. துஆவுக்கும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தது. மிக மிக அன்பிற்குரிய பையனாக இருந்தார்.

யூ.கே –வின் ஜாமிஆவில் படிக்கும் மாணவர்கள் என்னை முறைப்படி சந்தித்து வந்ததினால் ஒவ்வொருவருடனும் எனக்கு தொடர்பு இருந்தது. சந்திப்பின்போது எனக்கு நேரம் இருந்தால் கேள்வி கேட்டு பதிலும் பெறுவார்கள். இந்தப் பையனுடன் எனக்கு கடைசி சந்திப்பு நடந்தபோது அவரது மனதில் சில கேள்விகள் இருந்தன. அதற்கு நான் பதில் அளிக்க சிறிது நேரம் பிடித்தது. விளக்கமாக நான் எடுத்துக் கூறினேன். அவரது தந்தையார் கூறும்போதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது. இந்த சந்திப்பிற்குப் பிறகு இவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார். இன்று எனது சந்திப்பு கிட்டத்தட்ட 15–16 நிமிடங்கள் நிகழ்ந்தது. அதில் தனது எல்லா கேள்விகளுக்கும் விரிவான பதில் கிடைத்ததாக கூறியிருக்கிறார். அவரது கண்களில் கிலாஃபத்தின் மீது குறிப்பான பற்று மற்றும் ஒளி தென்பட்டது. இவர் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேரும்போது இவருக்கு ஒரு வேளை விளையாட்டுகளில்தான் அதிக ஆர்வம் இருக்கும் என்பது எனது எண்ணமாக இருந்தது. சிறு வயதிற்குரிய களங்கமற்ற தூய்மையும் பற்றும் இருக்கலாம். ஆனால் இந்த பையன் எனது மதிப்பீட்டை முற்றிலும் தவறாக்கிக் காட்டி விட்டார். படிப்பிலும் நல்ல கெட்டிக்காரராக இருந்தார். கண்டிப்பாக விளையாட்டில் நல்ல ஆர்வம் இருந்தது. மேலும் களங்கமின்மையிலும் ஆர்வம் இருந்தது. மேலும், களங்கமின்மையிலும் பற்றிலும் கூட மிகவும் உயர்ந்திருந்தார். கிலாஃபத் மற்றும் மார்க்கத்தை பாதுகாப்பதில்

ஓர் உணர்வு இருந்தது. நான் கூரிய வாள் ஆக இருப்பேன் என்ற உணர்வு இருந்தது.

அவரது சில நிலைமைகளை நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள். எண்ணற்ற எழுதக்கூடிய நண்பர்களும், அவரது வகுப்புத் தோழர்களும் ஜாமிஆவின் மாணவர்களும், சகோதர சகோதரிகளும், பெற்றோர்களும் என்னிடம் அவரது சிறப்பைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் அனைவருமே ஒரு விஷயத்தை எழுதியுள்ளார்கள். எளிமை, நன்னடத்தை, மார்க்க தன்மானம், கிலாஃபத்துடன் தொடர்பு, பற்று, விந்தோம்பல், உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பது ஆகியவை இவரது சிறப்புப் பண்புகளாக விளங்கின. அத்தகையோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலுக்கிணங்க சொர்க்கம் கடமையாக்கப்பட்டவர்களைச் சேர்ந்தவர் ஆவார்கள். ஒவ்வொருவரும் அவரை பாராட்டவே செய்கின்றனர். இந்தப் பையன் சிறப்பான மார்க்க உணர்வு கொண்டவராக விளங்கினார். விளையாட்டு, மலை ஏறுதல் போன்றவற்றில் அவர் பங்கேற்பதும் கூட மார்க்க சேவைக்கு ஆரோக்கியமான உடல் தேவை என்பதற்காகவே இருக்கலாம்.

அவரது தகுதி விபரங்களை எழுதுபவர்கள் எழுதுகிறார்கள்: ஒவ்வொருவரும் இதனை வெளிப்படுத்துகிறார்கள். ரிஸா சலீம் என்ற அன்பிற்குரிய அப்பையன் நமது Private Secretary அலுவலகத்தின் பணியாளரான சலீம் ஸஃபர் சாஹிபின் மகன் ஆவார். அவர் 10 செப்டம்பர் 2016 அன்று இத்தாலியின் Hiking –ன் போது ஒரு விபத்தில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இவர் 27 செப்டம்பர் 1993 –ஆம் ஆண்டு யூ.கே –விலுள்ள கில்ஃபர்ட்டில் பிறந்தார். இவர் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்தவர். இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது முப்பாட்டனார் கண்ணியத்திற்குரிய அல்லாதீன் சாஹிப் மூலமாக உருவானது. இவர் காதியானுக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சார்ந்தவர். இந்தப் பையன் 2012 –ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிப்பதற்காக சேர்ந்தார். இவரது குடும்பத்தின் முதல் முரப்பியாக ஆகிக் கொண்டிருந்தார். மூன்றாவது வருடம் தேர்வாகி நான்காவது வருடத்தில் நுழையவிருந்தார். மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார். வஸிய்யத் படிவத்தை நிரப்பித் தந்திருந்தார். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. இவரது வஸிய்யத் ஒப்புக் கொள்ளப்பட்டதாக நான் வஸிய்யத் அலுவலகத்திற்கு எழுதி விட்டேன். இவருக்கு பெற்றோரைத் தவிர இரண்டு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர்.

சலீம் ஸஃபர் சாஹிப் எழுதுகிறார்: எனது மிகவும் அன்பிற்குரிய பையன். பல நற்சிறப்புகள் வாய்ந்தவன். சிலவற்றைக் கூறுகிறேன் என்கிறார். எப்போதும் உண்மையையே பேசுவார். ஒரு தவறு அதனை பொருட்படுத்தமாட்டார். தனது தவறுகளை ஒப்புக் கொள்வதும் உண்மையின் மீது நிலைத்து நிற்பதும் அவரது வழக்கங்களில் அடங்கியிருந்தது. சிறுவர்களிடம் மிகவும் அன்பு செலுத்துவார். தனது சகோதரியின் குழந்தைகளை மிகவும் நேசிப்பார். சகோதரி தனது குழந்தைகளை கண்டித்தால் இவர் அழுது விடும் அளவுக்கு உணர்வுள்ளவராக இருந்தார். குழந்தைகளை அடிப்பதால் சீர்திருத்தம் ஏற்படாது என்று கூறுவார். இவர் தமது தாயாரிடம் அல்லது சகோதரியிடம் என்னுடன் எனது நண்பர்களும் வருகிறார்கள். வீட்டில் உணவு உண்பார்கள். உணவை தயார் செய்யுங்கள் என்று கூறி விடுவார். ஹாஸ்டலுக்குப் போகும் போது உண்பதற்குரிய பண்டங்களை இதை வைத்துக் கொள் என்று கொடுத்தால், நிறைய இருந்தால் கொண்டு போவார். அதாவது எனது ரூம்மேட்டுகள் அனைவருக்கும் போதுமானதாக இருக்க வேண்டும் என்று கூறி விடுவார். மறைத்து மறைத்து உண்ண இயலாது என்று கூறி அதை வைத்து விட்டுப் போய் விடுவார். தனது நண்பர்களின் துணிகளையும் கூட வீட்டுக்கு எடுத்து வந்து இதனையும் துவைத்து ஸ்திரி போட்டுத் தருமாறு கேட்பார். சகோதர சகோதரிகளுடன் மிகவும் அன்புடன் பழகி வந்தார். மிகவும் பொறுப்புடன் சேவை செய்து வந்தார். தனக்காக கண்டிப்பாக கையை சுருக்கிக் கொள்வார். கருமி என்று கூற முடியாது. வீண் விரயம் செய்ய மாட்டார். ஆனால் மற்றவர்களுக்காக மிகவும் தாராளமாக செலவு செய்வார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் கிலாஃபத்தின் மீதும் அளவற்ற நேசர் இருந்தது. கிலாஃபத்திற்கு எதிராக எந்தவொரு வார்த்தையையும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார். பேச்சைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருக்கவும் மாட்டார். ஒருபோதும் எதையும் வேண்ட மாட்டார். எனவே, இவரது தேவைகளைக் குறித்து நாங்களே கவனத்தில் கொள்ள வேண்டியதிருந்தது. படிக்கும் போது பொதுவாக ஐரோப்பாவிற்கு வெளியிலிருந்து வருபவர்களுக்கு குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வருபவர்கள் ஆங்கிலத் தேர்வுக்கு உதவி செய்வார்கள். சில பையன்களே எனக்கு எழுதியிருக்கிறார்கள். பெரும் சீனியர்கள் கூட ஆங்கிலத் தேர்வில் இவர் எங்களுக்கு உதவி செய்தார்; எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்; புரிய வைத்தார் என்று எழுதியிருக்கிறார்கள். கோபம் என்ற பெயர் கூட அவரது இயல்பில் இருந்ததில்லை. எப்போதும் புன்முறுவல் பூத்தவாறே இவரைக் கண்டனர். இதனையும் எல்லாரும் எழுதியிருக்கிறார்கள். தொழுகையில் மிகவும் பேணுதலாக இருந்து வந்தார். வக்ஃபே நவ் உடன் ஓர் அர்ப்பணிப்பு இருந்தது.

இவரது தந்தையார் கூறுகிறார்: இவர் மான்செஸ்டருக்கு வக்ஃபே ஆர்ஸியாக (தற்காலிக அர்ப்பணிப்பில்) சென்றிருந்தார். அவர் ஊருக்குத் திரும்பும் நாளில் அவரது சட்டைப் பையில் ஒருவர் ஒரு கவரை வைத்தார். அவர் அதனை திறந்து பார்த்த போது அதில் சிறிது பணம் இருந்தது. ரிஸா நன்றி செலுத்தியவாறு திருப்பிக் கொடுத்து விட்டார். அங்கிள், நாங்கள் இதனை வாங்குவது தடுக்கப்பட்டது. அதே மனிதர் சில நாட்களுக்குப் பிறகு எனக்கு கடிதமும் எழுதினார். ஒரு சிறு பையன் முரப்பி ஆகிக் கொண்டிருக்கிறான். அவன் இங்கு வந்தான். என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டான். அத்தகைய பையன்கள் முரப்பி ஆனார்கள் என்றால் நிச்சயமாக ஆன்மீக மாற்றம் ஏற்படும். ஏனெனில் எழுதப்பட்டிருந்தது. அவர் வாங்க மறுத்து விட்டார். மிகவும் உழைத்து தமது பணியைச் செய்தார்.

அவரது தாயார் கூறுகிறார்: எனது மகன் தனது பெற்றோருக்கும் ஜமாஅத்திற்கும் கட்டுப்படக்கூடியவனாக இருந்தான். என்னுடன் அன்புத் தொடர்பிருந்தது. ஒவ்வொரு பையனும் தனது பெற்றோரை நேசிக்கின்றார்கள் என்றாலும் அவரது அன்பின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. கவனத்தில் கொள்பவர், சொல்லை ஏற்பவர், சிறு விஷயத்திலும் நல்ல முறையில் பேசுபவர், சிறுவருடனும் பெரியவருடனும் அன்புடன் நடப்பவர், வீட்டில் இருக்கும் போது வீட்டு வேலைகளில் உதவி செய்வார். சிறிது நேரத்திற்கு ஒருமுறை சோர்ந்து போய் விட்டீர்களா? உதவி செய்ய வேண்டுமா? என்று கேட்பார். என்னை ஒருபோதும் கஷ்டமான நிலையில் பார்க்க முடியாதவராக இருந்தார். எனது கண்களில் கண்ணீர் வர நாம் பார்க்கக் கூடாது என்று கூறுவார். ஜாமிஆவிலிருந்து வீட்டுக்கு வரும்போது வீட்டிலுள்ள எல்லாரையும் விசாரிப்பார். அந்த வாரம் முழுவதும் எப்படியிருந்தார்கள் என்றும் எல்லாரையும் மிகவும் கவலையுடன் விசாரிப்பார். சிறுவராக இருந்தாலும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் இஸ்லாமாபாத் போகும்போது பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததுமே ஓடிப் போய் விடுவார். நான் ஹுஸூரை சந்திக்கப் போகிறேன். அத்துடன் நடைபயணமும் போக வேண்டும்.

ரப்வாவின் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா தற்போது இங்கு நோயுற்றிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் உடல் நலம் வழங்குவானாக! அவர்களது வீட்டுடன் இவருக்கு நல்ல தொடர்பிருந்தது. நான் அவர்களுக்காக நிறைய துஆ செய்கிறேன் என்று கூறி வந்தார். அல்லாஹ் அவர்களுக்கு உடல்நலம் வழங்குவானாக! அல்லாஹ் அவர்களுக்காக இவர் செய்த துஆவையும் ஒப்புக் கொள்வானாக!

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஜுமுஆ அன்று இரவு கனவில் பார்த்தேன். எனது வீட்டிற்கு நிறைய ஆட்கள் வருகிறார்கள். நிறைய நிழற்படங்கள் எடுக்கின்றனர். நான் பயந்து எழுதுகிறேன். நான் கனவு கண்டேன். நான் பயந்து விட்டேன். இந்தக் கனவு நல்ல தாக்கத்தைக் கொண்டதல்ல. சதகா கொடுங்கள் என்றார். நான் அலுவலகத்திற்குச் சென்று சதகா கொடுக்கிறேன் என்று நான் கூறுகிறேன். ஆனால், அதற்கு முன்பே அந்த பரிதாபத்திற்குரிய செய்தி வந்து விட்டது.

அவரது தாயார் கூறுகிறார்: எப்போது துணியைக் கொண்டு கொடுத்தாலும் அமைதியாகப் போட்டுக் கொள்வார்; பாராட்டுவார். விருந்தோம்பலில் மிகவும் உயரிய நிலையில் இருந்தார். ஒருமுறை ஒருவர் விருந்திற்கு அழைத்தால் அவரை மறக்கவே மாட்டார். அவர்களை எப்போது சந்தித்தாலும் இன்னின்ன நபர் வந்துள்ளார். அவர்களுக்காக உணவு தயார் செய்யுங்கள். உணவு உண்பதற்காக அழைப்பு விடுங்கள் என்று கூறுவார்.

பிறகு கூறுகிறார்: தனது டிரிப்பிற்கு போகும் முன் எனக்கு போன் மூலம் உருது எழுதக் கற்றுக் கொடுத்து வந்தார். நீங்கள் சகோதர சகோதரிகளை நலம் விசாரிப்பது எப்படி என்று உருதுவில் எழுதங்கள். நான் பதில் தருவேன் என்பார். நான் எப்போது அறிவுரை கூறினாலும் செயல்படுவதற்கு முயற்சி செய்வார்.

நண்பர்கள் இதனையே கூறுகின்றனர்: கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருந்தார். ஜமாஅத் அமைப்பின் ஒவ்வொரு சிறிய கட்டளையின்படியும் செயல்பட முயற்சி செய்வார்.

ஒருமுறை என்னிடம் கூறியதாக இவரது தாயார் கூறுகிறார்: அம்மா நான் எத்தகைய முரப்பியாக விரும்புகிறேன் என்றால் எவ்வளவு சிறந்த தொண்டினை ஜமாஅத்திற்கு செய்ய விரும்புகின்றேன் என்றால் நான் எத்தனை அஹ்மதிகளை உருவாக்கினேன் என்பதைப் பார்த்து நீங்கள் பெருமைப்பட வேண்டும்.

அவரது சகோதரி ரஃபியா சாஹிபா கூறுகிறார்: மிக மிக அன்பிற்குரிய சகோதரனாக இருந்தார். சிறுவர் என்றாலும் அவரது சிந்தனை மிகவும் ஆழமானதாக இருந்தது. சிறிய வயதாக இருந்தும் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்பவரும் எல்லா வயதினருடனும் அவர்களது வயதிற்கேற்ப பேசுபவருமாக இருந்தார். இன்று வரை யாருடைய உள்ளத்தையும் துக்கமடையச் செய்ததில்லை. ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாகக் கேட்பார். அதற்கு கண்ணியத்துடன் பதிலளிப்பார். இவரது சகோதரர் அஸத் சலீம் கூறுகிறார்: மிகவும் எளிமையான குணமுடையவர். மிகவும் நேரிய பேச்சைப் பேசுபவர். தற்போதுதான் சகோதரருக்காக ஒரு புதிய காரை வாங்கினேன். அவருக்கு Surprise கொடுத்தேன். இரண்டு சகோதரர்களும் நல்ல வேலை பார்க்கின்றனர். முதலில் இவர் அந்தக் காரின் விலையை விசாரித்தார். பிறகு, நான் ஒரு முரப்பி என்ற முறையில் எளிய வாழ்க்கை தான் வாழ வேண்டும். விலை உயர்ந்த பொருள் வாங்கக் கூடாது என்று கூறினார்.

இவரது சகோதரி அமத்துல் ஹஃபீஸ் சாஹிபா எழுதுகிறார்: இவரது சிறப்புகளில் ஒன்று, இவர் எவரது தவறைப் பற்றியும் கேட்க விரும்ப மாட்டார். மக்களின் எதிர்மறை கருத்துக்களையும் கூட நல்ல முறையில் மாற்றி விடுவார். நாம் மக்களின் நல்ல அம்சத்தை மட்டும் பார்க்க வேண்டும் என்பது அவரது கூற்றின் நோக்கமாக இருந்து வந்தது. அவரது தீமைகளைப் பற்றி பேசுவதற்கு பதிலாக அவருக்காக துஆ செய்ய வேண்டும். இவரது இயல்பின் எளிமைக்கு ஓர் உதாரணமாக, தாயார் ஈதிற்காக புதிய ஆடையை வாங்கித் தரும்போது மிகவும் கவலைப்பட்டு வந்தார். இந்த ஆடை தேவைக்கு அதிகமான பகட்டும் காட்டுதலும் உடையதாக ஆகி விடக்கூடாதே என்று நினைத்தார். எனவே தனது பழைய ஜாக்கெட் போன்றவற்றை அந்த ஆடைக்கு மேல் அணிந்து கொள்வார்.

ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் குத்தூஸ் சாஹிப் அவரும் உடன் இருந்தார். அவர் கூறுகிறார்: சிறு வயதிலிருந்து அவரை (ரிஸா சலீமை) நான் அறிவேன். எனக்கு ஜாமிஆவில் கற்பிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் தகுதி வாய்ந்த மாணவராக இருந்தார். வகுப்பில் முன் பக்கத்தில் அமர்வார். எப்போதும் புன்சிரிப்புடன் பேசுவார். அவர் எந்தவொரு கோபமும் பட்டதாக எனக்கு நினைவில்லை. எப்போதும் பிறருக்கு உதவி செய்வதற்கு முயற்சி செய்து வந்தார். கிரிக்கெட்டில் நல்ல ஆர்வம் இருந்தது.

ஆனால் ஸ்கோர் பார்க்க வேண்டும் என்று விரும்பினால் எப்போதும் ஆசிரியரிடம் கேட்டு விட்டுதான் செல்வார்.

அதேபோன்று ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் ஸஹீர் கான் சாஹிப் கூறுகிறார்: கடந்த இரண்டு வருடமாக ரிஸா சலீமுக்கு பாடம் நடத்தும் வாய்ப்பை பெற்று வந்தேன். மிகவும் எளியவர். இந்தப் பையனிடம் கண்ட தனிச்சிறப்பு என்னவென்றால் எந்த பொறுப்பை கொடுத்தாலும் மிகவும் உழைப்புடனும் பிடிப்புடனும் செய்தார். சில நேரங்களில் பார்த்துள்ளே. ஒரு வேலையில் நியமிக்கப்பட்ட மற்ற பையன்கள் அங்கிங்கு போய் விட்டாலும் கூட இவர் தானே அந்த வேலையைச் செய்து முடிப்பவராக இருந்தார். அப்பணி முடியும் பரை தனது முழு கவனத்தையும் அதில் செலுத்தி வந்தார். ரிஸா சலீம் உடைய மிகவும் பிடித்த ஒரு பழக்கமாவது தேவையில்லாத கேள்வி கேட்க மாட்டார். எப்போது கேள்வி கேட்டாலும் மேற்கத்திய உலகில் இஸ்லாம் அஹ்மதிய்யத்திற்கு எதிராக செய்யப்படும் ஆட்சேபனைகளை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கும். சில நேரங்களில் கூறுவார். ஒரு முஸ்லிம் அல்லாதவர் அல்லது அஹ்மதி அல்லாதவரிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் இந்த கேள்வியை கேட்டார் என்று கூறுவார். அவரது உள்ளத்தில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தற்காப்பு, அதன் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்குப் பதில் தருவதற்காக அல்லாஹ் ஓர் எழுச்சிமிகு ஆர்வத்தை வைத்திருந்தது போன்று இருந்தது.

அதுபோன்று இவரது ஓர் ஆசிரியர் செய்யது மஸ்ஹூது அஹ்மது எழுதுகிறார்: டியூட்டோரியல் பிரிவில் இணைந்திருந்தார். அறிவு மற்றும் உடற்பயிற்சி போட்டிகளில் சுறுசுறுப்புடன் பங்கு பெற்றார். அவருடைய பொது அறிவு மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் நன்றாக இருந்தது. அதுபோன்று கூறுகிறார்கள்: கடந்த வருடம் பைத் பாஸி போட்டியில் கலந்து கொள்வதற்காக இவர் **500** கவிதை வரிகளை மனனம் செய்து வைத்திருந்தார். அவரது இந்த சிறப்பு மிகவும் தெளிவாக இருந்தது. அதாவது, இவர் கவிதைகளை அப்படியே மனப்பாடம் செய்யாமல் கருத்துக்களை புரிந்து மனனம் செய்வார். ரிஸா சலீமுக்கு தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. கடந்த வருடம் இவர் வக்ஃபே ஆர்ஸியாக வுல்வர் ஹேம்டன் ஜமாஅத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு இவர் பிரசுரங்கள் விநியோகம் செய்ததுடன் உள்ளூர் ஜமாஅத் சகோதரர்களை சந்தித்து பல ஜமாஅத் புக் ஸ்டால்களை போடச் செய்தார். இவ்வகையில் ஒரு ஆங்கிலேரை சந்தித்தார். அவர் மார்க்க ரீதியில் நல்ல துடிப்புள்ள கிறித்தவராக இருந்தார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுயை ஆய்வின் ஒளியில் ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரி சிலுவையில் இருந்து விடுதலை பெற்று காஷ்மீரை நோக்கி இடம் பெயர்ந்ததைக் கூறினார். அவர் மிகவும் வியந்தார். அவரை பள்ளிவாயிலுக்கும் அழைத்து வந்தார். அதற்குப் பிறகும் கூட அவருடன் தொடர்பு கொண்டார்.

அதேபோன்று ஜாமிஆவின் ஆசிரியர் மன்சூர் ஸியா சாஹிப் எழுதுகிறார்: மிகவும் எளிமையான இயல்பு கொண்ட மாணவராக இருந்தார். இவரது முகத்தில் ஒருபோதும் கோபத்தின் அறிகுறியைக் கண்டதில்லை. கிலாஃபத் மற்றும் ஜமாஅத் கொள்கைகள் மீது உண்மையில்லாத ஆட்சேபனைகளை எவராவது எப்போது கூறினாலும் அந்த சந்தர்ப்பத்தில் இவரது முகத்தில் கடும் கோபத்தைக் கண்டுள்ளேன். இது இந்த பையனுடைய உள்ளத்தில் கிலாஃபத் மீது ஆழ்ந்த அன்பு இருக்கிறது என்பதற்கும் அது உள்ளத்தில் நிறைந்து காணப்படுகிறது என்பதற்கும் தெளிவான ஆதாரமாக இருந்தது. அவருக்கு கிலாஃபத்துடன் இருந்த தொடர்புக்கு மார்க்க அறிவைத் தேடும் ஓர் உதாரணமாக இருந்தது. வகுப்பில் எனது குத்பாவைப் பற்றி குறிப்பிட்டால், ஆய்வு செய்தால் இவருக்கு குத்பா சம்பந்தமாக பல விஷயங்கள் நினைவில் இருந்தன. குத்பாவை கவனத்துடன் கேட்பவராக இருந்தார்.

சுருக்கமாக மக்கள் எண்ணற்ற சம்பவங்களை கூறுகின்றனர். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! தனது அன்பிற்குரியவர்களின் பாதங்களில் இடமளிப்பானாக! இந்த பையன் நான் முதலில் கூறியது போன்று ஜாமிஆ தேர்வாவதற்கு முன்பே சிறந்த முரப்பியாகவும் முபல்லிக்காகவும் இருந்தார். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற தன்மானம் கொண்டவராக இருந்தார். அல்லாஹ் உலகிலுள்ள எல்லா ஜாமிஆ மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பினை வழங்குவானாக! அவர்களும் கலப்பற்ற தூய்மை மற்றும் பற்றில் முன்னேறுவார்களாக! தமது கடமைகளை நிறைவேற்றுவார்களாக! இவரது நண்பர்கள் இவரது சிறப்பை மட்டும் கூறினால் போதாது. நட்பின் உரிமையாவது அவரது சிறப்புகளை தம்முடையாக ஆக்கியவாறு தமது எல்லா திறமைகளுடனும் மார்க்கப் பணிக்காக பயன்படுத்த வேண்டும். எனக்கும், வரக்கூடிய கலீஃபாக்களுக்கும் எப்போதும் மிகச் சிறந்த சுல்தானே நஸீர் (வலிமையான உதவியாளர்கள்) கிடைத்துக் கொண்டிருப்பார்களாக!

அல்லாஹ் பெற்றோருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் மன நிம்மதியை வழங்குவானாக! இறைவனது திருப்தியில் திருப்தி அடைந்தவாறு இம்மக்கள் இந்தப் பொறுமையை காட்டியிருக்கிறார்கள். அதில் எப்போதும் நிலைநிற்பார்களாக! அல்லாஹ்வின் அருளுக்கு எப்போதும் வாரிசாவார்களாக! வருங்காலத்தில் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் பிரச்சனையிலிருந்தும் அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக!

தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் இவரது ஜனாஸா ஹாஸிர் தொழுகை நடைபெறும். நான் வெளியில் சென்று ஜனாஸா தொழ வைப்பேன். நீங்கள் இங்கேயே ஸஃப்களை சரி செய்யுங்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh, London – on 16.09.2016
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516